மலர் : 11 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 6

தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विलेज मिनिस्ट्री

ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

## ஏப்ரல் 2011

ஆண்டுசந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ. 250

# 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை




TVGM - 2011 ஏப்ரல்
கர்த்தரின் வாக்குத்தத்தம்

## பயப்படாதே,
## நான் உனக்குத்
## துணைநிற்கிறேன்.

ஏசாயா 41 : 13





உப்புலாபுரம் கிராமத்தில் கட்டியுள்ள ஜெபவீட்டை 13.02.2011 அன்று தேவனுடைய மகிமைக்கென்று **சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்** திறந்து வைத்தார்கள்.

**நன்றி : திருமதி ராணி எடிசன் & திரு. ஜுடு ( யூ.கே )**

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்



P.T. **கிறிஸ்டோபர்**
TVGM ஸ்தாபகர்



**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**
மேனேஜிங் டிரஸ்டி

*கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளுக்கு,*

*இயேசுவின் விலையேறப் பெற்ற நாமத்தில் வாழ்த்துக்கள் !*

தேவனுடைய மகிமைக்கென்று **03.02.2011**ம் தேதி திருச்சி சோமரசம்பேட்டை ஜெபவீடும் , **13.02.2011**ம் தேதி அன்று தருமபுரி - உப்பலாபுரம் ஜெபவீடும் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

ஒவ்வொரு மாதமும் அநேக தேவையுள்ள கிராம போதகர்கள் தங்களின் ஆலயத்தை கட்ட எங்களிடம் உதவி கேட்டு வருகின்றார்கள். நீங்களும் ஜெபித்து ஒரு ஆலயத்தைக் கட்ட பிரயாசப்படுங்கள்.

*100* - கிராம ஊழியம் ஒவ்வொரு மாதமும் தவறாமல் நடைபெற்று வருகிறது. அதன் மூலமாக அநேக புறமத நண்பர்கள் ஆசீர்வதிக்கப்பட்டு வருகின்றனர். அதற்காக தேவனை துதிக்கிறேன். எங்கள் TVGM திருச்சி தலைமை அலுவலகத்திற்கு அக்கவுண்ட் மற்றும் கம்ப்யூட்டர் வேலைகள் தெரிந்த ஆவிக்குரிய, மற்றும் தாலுந்துகள் உள்ள நபர்கள் தேவைப்படுகின்றார்கள். சிறுவர் இல்லப் பிள்ளைகளை பயிற்சிவிக்க அற்பணிப்புள்ள வார்டன் குடும்பமும் தேவைப்படுகிறது. இதற்காக ஜெபியுங்கள்.

முழுஆண்டு தேர்வு எழுதிக் கொண்டிருக்கும் நமது சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஊழியத்தின் தேவைகளுக்காக ஜெபியுங்கள் ! ஊழியத்தில் பங்குபெறுங்கள் !

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக !

கிறிஸ்துவின் பணியில்,

08.03.2011 **ஸ்டீபன் கிறிஸ்டோபர்**

# பயப்படாதே, நான் உனக்குத் துணைநிற்கிறேன்

ஏசாயா 41 : 13

**வாக்குத்தத்த செய்தி : சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்**

2011 ஏப்ரல் மாத கர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்காக காத்திருக்கும் அன்பு சகோதர, சகோதரிகளே! தேவன் உங்களுக்கு சொல்கிறார் :

**பயப்படாதே, நான் உனக்குத் துணைநிற்கிறேன்.**

ஏசாயா புத்தகத்திலே, தேவன் இஸ்ரவேல் ஜனங்களை நோக்கி பயப்படாதே என்று அநேக இடங்களில் சொல்லுகிறதைப் பார்க்கலாம். **"நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்"** என்று ஏசாயா 41:10ல் வாசிக்கலாம். இது அநேக இடங்களில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இதனை உற்றுப் பார்த்தால், **"பயப்படாதே"** என்ற கட்டளையும், **"தேவன் உனக்கு துணை நிற்கிறார்"** என்ற ஆறுதலான வார்த்தைகளும் கொடுக்கப்பட்டிருக்கிறது. நம் தேவன் எவ்வளவு அருமையானவர்!

அநேக நேரங்களில் நம்முடைய வாழ்க்கையில் கஷ்டமான சூழ்நிலைகளின் வழியே கடந்து செல்லும்போது, நாம் கவலைப்பட்டு சோர்ந்துபோகிறோம். அந்த நேரத்தில் நமக்கு உதவி செய்ய யாரும் இல்லையே என நினைக்கலாம். யாராவது நமக்கு உதவி செய்தால் அவர்களுக்கு மிகுந்த நன்றியுள்ளவர்களாக இருப்போம். இதுபோன்று, நாம் முற்றிலும் கைவிடப்பட்ட நிலையில் இருக்கும்போது இயேசு நமக்கு உதவி செய்ய விரும்புகிறார். இதை நாம் ஏசாயா 43 : 2 – ல் படிக்கலாம். " **நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினி ஜீவாலை உன் பேரில் பற்றாது.**"

புதிய ஏற்பாட்டிலே, பல இடங்களில் இயேசு ஜனங்களை தொட்டு அவர்களுடைய கஷ்டமான சூழ்நிலைகளிலே குணமாக்கினார். இயேசு குஷ்டரோகியை சுத்தமாக்கினார் (மத்தேயு 8 : 3, மாற்கு 1 : 41 , லூாக்கா 5:13 ), ஜுரத்தை குணமாக்கினார் ( மத்.8:15),குருடரை பார்வையடையச் செய்தார் (மத்.20:34), கொன்னைவாயுடைய செவிடனை குணமாக்கினார் (மாற்.7:33), மரித்தவனை உயிரோடு எழுப்பினார் ( லூாக்.7:14) போன்ற அற்புதங்களைச் செய்தார்.

இதே போல, இந்த மாதத்திலே இயேசு உங்களைத் தொட்டு குணமாக்குவார்.

அநேக நேரங்களில், தேவன் நம் பக்கத்தில் இருக்கிறாரா ? என்ற எண்ணங்கள் தோன்றும். ஏனென்றால் யாரும் உதவி செய்ய முடியாத சூழ்நிலைகள் காணப்படலாம். இந்த உலகத்தில் நமக்கு கைவிடப்பட்ட எண்ணங்கள், பயங்கள், பிரச்சனைகள் வந்தாலும் நமக்கு உதவி செய்யவும், பாதுகாக்கவும் நம்முடைய தேவன் எப்போதும் நம்மோடு இருக்கிறார். பயப்படாதீர்கள்!

சில சமயங்களில் நம் பிரச்சனைகளுக்கு உதவ வேறு வழிகளையோ அல்லது அந்தஸ்து உள்ள மக்களின் சிபாரிசுகளையோ நாடுவோம். ஆனால் தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கு தேவனே நம்மோடு இருந்து நம் சூழ்நிலைகளிலே உதவி செய்வார். கவலைப்படாதீர்கள்!

வேதத்திலே, பல தருணங்களில் தேவன் அவருடைய ஜனங்களை நோக்கி பயப்படாதிருங்கள் என்று சொல்லுகிறதை நாம் வாசிக்கலாம். அதற்கு சில உதாரணங்கள் கீழே உள்ளது.

**1 நாளா. 28 : 20**, தாவீது சாலொமோனிடத்தில் இவ்வாறு சொல்லுகிறதை படிக்கலாம், "நீ பயப்படாமலும் கலங்காமலும் இரு; தேவனாகிய கர்த்தர் என்னும் என் தேவன் உன்னோடே இருப்பார். கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிற தற்கடுத்த சகல கிரியைகளையும், நீ முடித்துத் தீருமட்டும், அவர் உன்னை விட்டு விலகவுமாட்டார், உன்னை கைவிடவுமாட்டார்."

**சங்கீதம் 27 : 1** – ல், "கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர் யாருக்கு பயப்படுவேன் ? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன் ?" என்று தாவீது உலகத்தைப் பார்த்து கூறுகிறார்.

**மத்தேயு 10 :28**– ல் , "ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர் களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம். ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்" என்று வாசிக்கலாம்.

**1கொரி. 16 : 13**– ல் "விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன் கொள் ளுங்கள்" என்று வாசிக்கலாம்.

**உபா. 31 : 6** – ல் "நீங்கள் பலங் கொண்டு திடமனதாயிருங்கள், அவர்களுக்குப் பயப்படவும் திகைக்க வும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தர் தாமே உன்னோடேகூட வருகிறார்; அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" என்று வாசிக்கலாம்.

2 தீமோ. 1 : 7 – ல் "தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும், அன்பும் தெளிந்த புத்தியு முள்ள ஆவியையே கொடுத்திருக் கிறார்." என்று வாசிக்கிறோம்.

எபி. 13 : 5,6 – ல் "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே. அதினாலே நாம் தைரியங்கொண்டு : கர்த்தர் எனக்கு சகாயர் நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே".

நீங்கள் இனி பிரச்சனைகளை சந்திக்கும்போது, யோவான் 14:1ல் இயேசு சொன்னதுபோல "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்; என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்" என்பதை நீங்களும் செய்யுங்கள்.

நீதி. 3 : 24 "நீ படுக்கும்போது பயப்படாதிருப்பாய்; நீ படுத்துக் கொள்ளும்போது உன் நித்திரை இன்பமாயிருக்கும்."

பயப்படாதே என்று அநேக ஆறுதலான வசனங்கள் வேதாகமத்திலே காணப்பட்டாலும், நாம் சூழ்நிலைகளுக்கு பயப்படாமல் தேவனுக்கு மட்டும் பயந்து காணப்பட வேண்டும். நாம் தேவனுக்கு பயப்படும்போது, நமது எல்லா பயங்களையும் நீக்கி நமக்கு உதவி செய்வார். அப்படி செய்யும் போது இந்த மாத வாக்குத்தத்தத்தை நம் வாழ்க்கையில் நிறைவேற்றுவார்.

மேலும் நாம் தேவனுக்கு ஏன் பயப்பட வேண்டும் என்று ஆறு காரியங்களை பார்ப்போம்.

**முதலாவதாக, கர்த்தருக்கு பயப்படுதல் ஞானத்தைப் பெருகப் பண்ணும்.**

நீதி. 9 : 10 "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். பரிசுத்தரின் அறிவே அறிவு."

**இரண்டாவதாக, கர்த்தருக்கு பயப்படும்போது நாம் பரிசுத்தர்களாக மாற முற்படுகிறோம்.**

நீதி. 3 : 7 "நீ உன்னை ஞானியென்று எண்ணாதே. கர்த்தருக்குப் பயந்து தீமையை விட்டு விலகு."

**மூன்றாவதாக, கர்த்தருக்குப் பயப்படும்போது நம் ஆயுசு நாட்களைப் பெருகப்பண்ணுவார்.**

நீதி. 10 : 27 "கர்த்தருக்குப் பயப்படுதலே ஆயுசு நாட்களைப் பெருகப் பண்ணும்."

**நான்காவதாக, கர்த்தருக்குப் பயந்து நடந்தால் நமக்கு அடைக்கலம் உண்டு.**

நீதி. 14 : 26 "கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்குத் திடநம்பிக்கை உண்டு; அவன் பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கிடைக்கும்."

**ஐந்தாவதாக, கர்த்தருக்குப் பயப்படுதல் நமக்கு ஜீவனைத் தருகிறது.**

நீதி. 14 : 27 "கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவஊற்று; அதனால் மரணக் கண்ணிகளுக்குத் தப்பலாம்."

**ஆறாவதாக, கர்த்தருக்குப் பயப்படுதல் நமக்கு பெருத்த ஆசீர்வாதங்களைக் கொடுக்கும்.**

நீதி. 22 : 4 "தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும், மகிமையும், ஜீவனுமாம்."

**பக்தன் பாடுகிறார் :**

**பயப்படமாட்டேன் நான்**
**பயப்படமாட்டேன்**
**இயேசு என்னோடு இருப்பதனால்**
**உதவி செய்கிறார், பெலன் தருகிறார்**
**ஒவ்வொருநாளும் கூட வருகிறார்.**

ஆம்! அனுதினமும் நமக்கு உதவி செய்ய அவர் நம் கூடவே இருக்கிறார். ஆதலால் பயப்படாதிருங்கள்!

பின்வருமாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.

**கர்த்தர் எனக்கு துணைநிற்கிறார்.**
**நான் பயப்பட மாட்டேன்.**
**மனுஷன் எனக்கு என்ன செய்வான்?**

**தேவனுக்கே மகிமை!**

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ. 4 : 5**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு "100 - கிராம ஊழியம்"** திட்டத்தின் மூலம் **'வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்'** இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

## வேலூர் மாவட்டம் -வேலூர் யூனியன்

# 100 - கிராம ஊழியம்

**நோக்கம்:** **2011 ஏப்ரல் 4** திங்கள் காலை 9 மணி முதல் **ஏப்ரல் 8** வெள்ளி இரவு 10 மணி முடிய **வேலூர் யூனியன் கிராமப் பகுதிகளில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து **"வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்"** இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் :2011 ஏப்ரல் 4** திங்கள் காலை **9 - 1** மணி

**கடைசி நாள் ஜெபம் : 2011 ஏப்ரல் 8** வெள்ளி இரவு **7 - 10** மணி

**( 2011 ஏப்ரல் 4 - 8 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்,** TVGM
C/o. **ஏலீம் ஏ.ஜி. சர்ச்**
**15, முல்லை நகர், 2வது மெயின் 2வது கிராஸ்,**
**ஒட்டேரி , பாகாயம்,**
**வேலூர் - 632 002.**
**செல்: 94423 07830**

உதவி செய்ய முன் வந்த Pastor J. **இன்பநாதன்** அவர்களுக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. 5 செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.
**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**
2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும் :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்,
**100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241**

# புதுக்கோட்டை மாவட்டம் - திருமயம் யூனியன்
# 100 - கிராம ஊழிய அறிக்கை

## ஊழியம் நடைபெற்ற தேதி : 14 . 02. 2011 – 18.02.2011

முதல்நாள், கடைசிநாள், கூடுமிடம், உணவு, இனிப்பு, பார்சல் செலவுகளை பொறுப்பெடுத்து உதவி செய்தவர் : **பாஸ்டர் ஐசக்**
**இயேசுகிறிஸ்துவின் பேழை, திருமயம்**
முதல் நாள் தேவசெய்தி கொடுத்தவர் : **பாஸ்டர் கைவல்யம்டேவிட்**
ஊழியம் செய்த கிராம ஊழியர்களின் எண்ணிக்கை : 37 **பேர்**
பிரிக்கப்பட்ட மொத்த குழுக்கள் : 9 **குழுக்கள்**
வழங்கப்பட்ட சுவிசேஷப் புத்தகங்கள் : 10,635 யோவான் சுவிசேஷங்கள்
இயேசுவே இரட்சகர் கைப்பிரதிகள் : 15,000
மற்ற கைப்பிரதிகள் : 5000
சிலுவைக்கொடிகள் : 10,000
புறமதநண்பர்களின் விலாசங்கள் : 129

## கிராம ஊழியங்களின் அனுபவ சாட்சிகள்

**குழு 1 : சகோதரர்கள் :– ஆபிரகாம், இஸ்ரவேல் வீமன், சூசைமாணிக்கம், ஜெபமலைநாதன், பீட்டர் ராமலிங்கம்,**

**ஊனையூர்** ஊராட்சியிலுள்ள 12 கிராமங்களில் வீட்டிற்கொரு யோவான் சுவிசேஷம் கொடுத்து சுவிசேஷத்தை அறிவித்தோம். இங்குள்ள சிறுவர்கள் மற்றும் யாவரும் வாஞ்சையாக வாங்கி னார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 2 : சகோதரிகள் :– ரூத்கலா, மணியம்மாள், தேவகிருபை, ரெபேக்கா.**

**பனையப்பட்டி** கிராமத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்கு சென்று போலீஸ் அதிகாரிகளுக்கு சுவிசேஷம் சொல்லி ஜெபித்தோம். ஊழியத்தின் போது நாய்கள் வெறியோடு எங்களைச் சுற்றி கடிக்க வந்தது. இயேசுவே என்று கூப்பிட்டபோது கர்த்தர் எங்களை காப்பாற்றினார். மொத்தம் 1010 சுவிசேஷப் புத்தகங்கள், 1100 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 3 : சகோதரர்கள் :– யோசுவா, பிரேம்ஆனந்த், அந்தோணி, பாபு சாலமோன், ஆசீர்பாண்டி**

**குருவம்பட்டி** கிராமத்தில் கிறிஸ்தவத்திற்கு எதிரானவர்கள் இருக்கிறார்கள். ஆகவே அங்கு போகாதீர்கள் என்று ஒருவர் கூற நாங்கள் 2 பேர் மட்டும் அக்கிராமத் திற்கு போகாமல் திரும்பினோம். மற்றவர்கள் அப்படிப்பட்டவர்கள் அங்கு இருக்கிறார்கள் என்பதை அறியாமல் அங்கு சென்று சுவிசேஷம் அறிவித்தபோது, சுவிசேஷத்தை கேட்ட அக்கிராம மக்கள் சத்தியத்திற்கு செவிகொடுத்தார்கள். மொத்தம் 1700 சுவிசேஷப் புத்தகங்கள், 1200 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 4: சகோதரிகள் :- மரியம்மாள், கிரேஸ்பத்மா, தேவபாக்கியம், அபியேல் அந்தோணியம்மாள்.**

நாங்கள் 12 கிராமங்களில் சென்று வீடுவீடாக சுவிசேஷப் புத்தகம் கொடுத்து சத்தியத்தை அறிவித்தோம். வியாதியுள்ளவர்களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 1670 சுவிசேஷப் புத்தகங்கள், 1100 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 5 : சகோதரிகள் :- ஷீலா, எஸ்தர் கனகாம்புஜம், அந்தோணிமேரி**

**நற்சாந்துப்பட்டி** ஊராட்சியிலுள்ள கிராமங்களில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். யாவரும் சந்தோஷமாக வாங்கிக் கொண்டார்கள். அநேகருக்காக ஜெபித்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1100 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6 : சகோதரிகள் :- வசந்தா, கிளமெண்ட்ஸ்மேரி, ஜோதிமணி, கிருபா பழனியம்மாள்.**

**கோவனுார், மேக்கினிப்பட்டி** ஆகிய கிராமங்களில் ஊழியம் செய்தோம். இங்கு சுப்பையா என்பவர் தன்னுடைய மனக்கவலைகளைச் சொல்லி அழுது எங்களிடம் ஜெபிக்கும்படி கூறினார். இவருக்காக ஜெபித்தோம். **குழிபிறை** கிராமத்தில் ஒருவரிடம் சுவிசேஷப் புத்தகத்தை கொடுத்தபோது, நான் பூசாரி என்னிடமே இதைக் கொடுக்கிறீர்களா ? என்று எங்களை திட்டி விரட்டினார். இன்னொரு இடத்தில் சிலை வழிபாடு நடந்து கொண்டிருந்தது. அங்கிருந்த பூசாரிக்கு சுவிசேஷம் சொல்லி புத்தகம் கொடுத்தபோது, அவர் இயேசு என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும் என்று புத்தகத்தை வாங்கிக் கொண்டு, அங்கிருந்தவர்களையும் வாங்கி படியுங்கள் என்று அவரே புத்தகங்களை எங்களிடம் இருந்து வாங்கி கொடுத்தார். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1100 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7: சகோதரிகள் :- சலோமி சம்மனசு, பிச்சையம்மாள், எஸ்தர் எபிநேசர், செல்லக்கனி.**

**செம்பூதி** கிராமத்தில் சுவிசேஷப் புத்தகங்களைக் கொடுத்து ஊழியம் செய்தோம். வழியில் சில வாலிபர்கள் எங்களிடம் வாக்குவாதம் செய்து எங்களை ஊழியம் செய்யக் கூடாது, இயேசுவைப் பற்றி பிரச்சாரம் செய்யக்கூடாது என்று கூறினார்கள். நாங்கள் அங்கிருந்து அடுத்த கிராமத்திற்கு சென்று ஊழியம் செய்தோம். அநேகர் தங்கள் பிரச்சனைகளைக் கூறி ஜெபிக்கக் கேட்டார்கள். ஜெபித்தோம். மொத்தம் 1020 சுவிசேஷப் புத்தகங்கள், 1100 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8: சகோதரிகள் :- லூயிஸ், கஸ்தூரி, மேரிமீனா, அன்னாள்.**

**ராராபுரம்** கிராமத்தில் ஒரு பெண்ணிடம் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தபோது, உடனே அவள் நாங்கள் உங்களைப் பின்பற்றி வரமுடியாது. எங்கள் குலதெய்வம் பொல்லாதது என்று கூறினாள். **குலமங்கலம்** கிராமத்தில் நான்கு பெண்கள் கூடியிருந்த இடத்தில் கைப்பிரதிகள் கொடுத்து இயேசு உங்களை நேசிக்கிறார் என்று சொன்ன போது அவர்களில் ஒரு பெண் இதையெல்லாம் நான் வாங்கமாட்டேன் எனக்கு வேண்டாம் என்றாள். அதற்கு பக்கத்திலிருந்த ஒரு பெண் இதை வாங்கினாள் **நாம் பாவம் செய்யாமல் பரிசுத்தமாக வாழ்ந்து பரலோகம்**

**செல்லலாம்** என்றாள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1100 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 9 : சகோதரர்கள் :- மாற்கு மாரியப்பன், செல்வராயர்பால், நோவா, மகாராஜன்.**

**நல்லூர், ஈக்குடிப்பட்டி, முத்தூர்** ஆகிய கிராமங்களில் ஊழியம் செய்தோம். யாவரும் சந்தோஷமாக சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டார்கள். எந்த எதிர்ப்புகளும் இல்லை. மொத்தம் 1235 சுவிசேஷப் புத்தகங்கள், 1100 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை!**

**2011 ஏப்ரல் மாத**
**இயேசுவை விரும்புவோர் முகாம்**

மாவட்டம் : புதுக்கோட்டை
தாலுகா : ஆலங்குடி
நாள் : 16.04.2011
நேரம் : காலை 9 மணி

**கூடுமிடம்**

**பாஸ்டர் லாரன்ஸ்**
**இயேசுகிறிஸ்துவின் பேழை**
S.S.**தெரு, கும்மங்குளம் ரோடு**
**ஆலங்குடி - 622 301.**
**புதுக்கோட்டை மாவட்டம்.**
**செல் : 99421 33058**

## இயேசுவை விரும்புவோர் முகாம் அறிக்கை




கர்த்தருடைய கிருபையினால் சிவகங்கை மாவட்டம் – **சாக்கோட்டை** யூனியனில் **19.02.2011** அன்று காரைக்குடி அசோக்நகர் **எர்மோன் சபையில் இயேசுவை விரும்புவோர் முகாம்** நடைபெற்றது. **பாஸ்டர் ஸ்டீபன், பாஸ்டர் அமல்ராஜ்** ஆகியோர் பொறுப்பெடுத்துக் கொண்டு உதவிசெய்தார்கள்.

இம்முகாமிற்கு வரும்படி சாக்கோட்டை யூனியனிலிருந்து TVGM உடன் கடிதத் தொடர்பு கொண்டுள்ள புறமத நண்பர்களுக்கு அழைப்பு கடிதம் அனுப்பப்பட்டது. 6 பேர் இம்முகாமில் கலந்து கொண்டார்கள்.

இவர்களுக்கு இயேசுவின் பிறப்பு , பாடு , மரணம் பற்றி கூறி **“இயேசுவே மெய்யான தெய்வம் ”** என்பதை வேதத்தின் அடிப்படையில் கூறிய போது, இவர்கள் தங்களை இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்து சபைக்கு வருவதாக சொன்னார்கள். தங்களுடைய தனிப்பட்ட பிரச்சனைக்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். TVGM விருந்து வருகிற வேதபாடங்களும், கடிதங்களும் இயேசுவின் மீது விசுவாசம் வைக்க மேன்மேலும் உற்சாகப்படுத்துகிறது என கூறினார்கள்.

இவர்களுக்காக எர்மோன் சபையின் பாஸ்டர் ஸ்டீபன் அவர்களும், பாஸ்டர் அமல்ராஜ் அவர்களும் ஜெபித்தார்கள். மதிய உணவு வழங்கப்பட்டது, இறுதியாக ஜெபித்து ஆசீர்வாதம் கூறி முகாம் முடித்து வைக்கப்பட்டது.

**தேவனுக்கே மகிமை!**

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

## துதி, கனம், மகிமை - இயேசு கிறிஸ்துவுக்கே!

## TVGM பின்தொடர்பணி ஊழியங்கள்

*ஒவ்வொரு மாதமும் நடைபெறும் 100-கிராம ஊழியத்தின்போது சந்திக்கும் புறமத நண்பர்களுக்கும் மற்றும் TVGM தலைமை அலுவலகத்தோடு கடிதத் தொடர்பு கொள்ளும் ஆர்வமுள்ள புறமத நண்பர்களுக்கும் தபால் மூலம் வேதபாடங்கள் அனுப்பப்பட்டு வருகிறது. அவ்வாறாக அனுப்பப்பட்ட வேத பாடங்களை படித்து பயன்பெற்ற புறநண்பர்களின் சாட்சிகளில் சில . . .*

**சகோதரி கோமதி , காரைக்குடி**

நான் சோர்ந்துபோய் இருந்த நேரத்தில் நீங்கள் அனுப்பியிருந்த வேதபாடங்களிலுள்ள வசனங்கள் உள்ளத்திற்கு மிகுந்த ஆறுதல் அளிப்பதாக இருந்தது. முதல் வேதபாடத்தை 5 முறை படித்துள்ளேன். இயேசு மெய்யாகவே என்னை நேசிக்கிறார் என்பதை அறிந்து கொண்டேன். ஆண்டவர் இயேசுவை மெய்யாகவே நான் நேசிக்கிறேன். ஆண்டவர் இயேசு மட்டுமே என் பாவங்களுக்காக தனது இரத்தத்தை சிந்தி கிரயம் செலுத்தினார் என்பதை 100% நம்புகிறேன்.

**சகோதரி ஜேனட் , கண்டனூர்.**

நான் TVGM மூலம் வந்த வேதபாடங்களை படித்து பார்த்து கிறிஸ்துவுக்குள் வளர்ந்துள்ளேன்.

*இப்படியாக TVGM உடன் தொடர்பு கொள்ளும் புறமத நண்பர்களுக்கு ஒவ்வொரு மாதமும் "தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன்" என்ற மாதஇதழை அனுப்பி வருகிறோம். அதின் மூலம் ஆசீர்வதிக்கப்பட்டவர்களின் சாட்சிகள் இதோ . . .*

**சகோதரி மீனா அய்யாவு, தஞ்சாவூர்**

2011 ஜனவரி மாதஇதழில் **"முந்தின சீரைப் பார்க்கிலும் உங்களுக்கு நற்சீர் உண்டாகச் செய்வேன்"** என்ற வாக்குத்தத்தத்தை படித்ததும் மனதிற்கு உற்சாகமும், ஆறுதலும் கிடைத்தது.

**திருமதி கற்பகம் குமரன் , தி. மலை**

நீங்கள் ஒவ்வொரு மாதமும் அனுப்பும் பத்திரிகையிலுள்ள வாக்குத்தத்தம் எனக்கு ஆறுதலான வார்த்தையாக உள்ளது.

**சகோ. பார்த்திபன் , வேலூர்**

தாங்கள் அனுப்பும் பத்திரிகையின் மூலம் எங்கள் குடும்பம் பயனடைந்து வருகிறது.

*இது போன்ற அனுபவங்களை உங்கள் அருகிலுள்ள புறமத நண்பர்களும் பெற்று அனுபவிக்க வேண்டாமா ? இன்றே உங்கள் நண்பர்கள் மற்றும் இயேசுவை அறியாத புறமத நண்பர்கள் எங்களிடம் தபால் மூலம் வேதபாடங்களை பெற்று படிக்கவும், **"தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன்"** மாதஇதழை பெற்று பயன்பெறவும் உற்சாகப்படுத்துங்கள். உதவி செய்யுங்கள்.*

***கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!***

# வேலைக்கான ஆலோசனைகள்

## ( கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் )

எந்த சூழ்நிலைகளிலும் ஆண்வருக்கு சாட்சியாக வாழ, தேவன் நமக்கு ஒரு வேலையை வைத்திருக்கிறார். 1 கொரி.717ல் வாசிப்பது போல "தேவன் அவனவனுக்கு பகிர்ந்தெப்படியோ, கர்த்தர் அவனவனை அழைத்ததெப்படியோ, அப்படியே அவனவன் நடக்கக்கடவன்" என்று பார்க்கிறோம்.

ஆகவே எல்லா சூழ்நிலைகளிலும் நாம் விசுவாசியாக வாழ தேவன் நம்மை அழைத்திருக்கிறார்.

தேவன் நமக்காக ஒரு திட்டமான நோக்கத்தையும், நாம் செய்யும் வேலை என்னவாயிருந்தாலும் தேவன் நம் வாழ்க்கையில் கிரியை செய்ய விரும்புகிறார் என்பதையும் நாம் புரிந்துக் கொள்ள வேண்டும். அப்படி செய்யும் போது, நாம் மற்றவர்களை நல்லவிதத்தில் பாதித்து அநேகருக்கு ஆசீர்வாதமாக இருக்கலாம் ( 2தீமோ. 1: 9 , 1 பேதுரு 2 : 9 ).

இன்று அநேக மாணவர்கள் வருமானத்தின் அடிப்படையில் அல்லது பெற்றோர்களின் ஆர்வத்தினால் அல்லது இன்றைய காலத்தின் மோகத்தினால், தங்கள் வேலைகளை தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஆனால் பரிசுத்த ஆவியானவருக்கு செவிக்கொடுத்து, அவர் நாம் என்ன செய்ய சித்தமாய் இருக்கிறாரோ, அதை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை புரிந்துக் கொள்ள வேண்டும். இதனை யோவான் 14 : 16ல் படிக்கலாம். "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்." சரியான வேலையைத் தேர்ந்தெடுக்க நான்கு காரியங்களை நம் வாழ்வில் செய்ய வேண்டும்.

***1. வேத்தை வாசிக்க வேண்டும்.***

***2. ஞானத்துக்காக, வழிநடத்துதலுக்காக, புரிந்துகொள்ளு தலுக்காக ஜெபிக்க வேண்டும்.***

***3. தேவனிடத்தில் காத்திருக்க வேண்டும்.***

***4. தேவன் காட்டும் திசையில் செல்ல வேண்டும்.***

***1. வேத்தை வாசிக்க வேண்டும்:*** சரியான வேலையைத் தேர்ந்தெடுக்க, நாம் வேதத்தை வாசிக்க வேண்டும். நாம் எப்படி வேலையை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று வேதாகமம் கூறுகிறதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாம் வேதத்தை வாசிக்கும்போது, தேவன் நமது எண்ணங்களை தெளிவாக்குவார். நம்முடைய எண்ணங்களை அவர் சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கும்போது, நாம் சரியான வேலையை தேர்ந்தெடுக்க முடியும்.

***2. ஞானத்துக்காக, வழிநடத்துதலுக்காக, புரிந்து கொள்ளுதலுக்காக ஜெபிக்க வேண்டும் :*** நாம் ஜெபித்து தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ள வேண்டும். நாம் மூன்று காரியங்களுக்காக ஜெபிக்க வேண்டும்.

**அ)** முதலாவது ஞானத்திற்காக ஜெபிக்க வேண்டும். நமக்கு ஞானம் இருக்கும்போது தான், சரியான முடிவுகளை எடுத்து திறமையான வேலை செய்பவராக விளங்க முடியும் . நீதி. 22 : 29 ''தன் வேலையில் ஜாக்கிரதையாய்'' இருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்'' என்று வாசிக்கிறோம். மேலும் நீதி. 3 :5 இப்படி சொல்லுகிறது : ''உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்து ... '' . வேறு சில வசனங்களை பின்வருமாறு காணலாம். நீதி. 20 :5 , 24 : 6 , 29 : 18 , 16 : 1, 2:6, யாக். 4 : 13 – 16, எரே. 29 : 11 – 13.

**ஆ )** இரண்டாவதாக வழிநடத்துதலுக்காகவும், நல்ல ஆலோசனை களுக்காகவும் ஜெபிக்க வேண்டும். நம்மை வழிநடத்த சரியான நபரை தேர்ந்தெடுக்க வேண்டும். இந்த கடைசிக் காலங்களில் அநேகர் நம்மை எளிதாக திசைத் திருப்பலாம். அதனால் நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாய் காணப்பட வேண்டும். இதுப் பற்றிய சில வசனங்கள் பின்வருமாறு காணலாம். உபா. 13 : 1 –5 , 1 தெச. 5 : 4 – 11, 1 தீமோ. 6: 9–19, 1பேதுரு 5 : 6–11, 4:17, சங்.119:105, 2தீமோ. 2: 14 –16, எபேசியர் 5 : 15,16

**இ )** மூன்றாவதாக தேவன் நம்மை எப்படி விசேஷமாக பயிற்றுவிக்க விரும்புகிறார் என்பதை புரிந்துகொண்டு ஜெபிக்க வேண்டும். தேவன் நம்மை விசேஷித்த விதமாக பயன்படுத்த விரும்புகிறார். இதைப் பற்றிய சில வசனங்கள். யாத். 35 : 30 – 36: 1, நீதி. 4 : 10 –13, 29:18,லூக். 16 : 10 – 13, கலா.6:4,5, சங். 139 : 1–18, ரோமர் 12 : 1–8, 1கொரி.12, நெகேமியா 1: 4, கொலோ.4:12,13.

***3. தேவனிடத்தில் காத்திருக்க வேண்டும் :*** நாம் தேவனிடத்தில் காத்திருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. அப்படிக் காத்திருக்கும்போது நாம் தேவன் சொல்லுகிறதைக் கேட்டு எல்லாவற்றிலும் முன்னேற முடியும். தேவன் நம் வாழ்வில் செய்ய விரும்புகிறது என்ன என்பதை பற்றி நாம் உறுதியாக இருக்கலாம்.

***4. தேவன் காட்டும் திசையில் செல்ல வேண்டும்:*** நாம் தேவன் காட்டும் திசையில் செல்ல வேண்டும். அப்படி சரியான திசையில் செல்லும்போதுதான் முதன்மையாகவும், தேவனுக்காக அநேக காரியங்களையும் சாதிக்கலாம். நாம் சரியான திசையில் செல்லும்போது நம்மை சுற்றியுள்ளவர்கள் சிறந்ததாக கருதும் வாய்ப்புகளை நாம் வேண்டாம் என்று உறுதியாக சொல்லி தேவன் தருகிறவைகளையே தேர்ந்தெடுக்கும்போது நமக்கு ஆசீர்வாதமாக இருக்கும். அப்படி செய்யும்போது, நம் கண்களுக்கு அது ஆச்சரியமானதாகவும் தோன்றும்.

**உங்களை சிறந்த வேலையை தேர்ந்தெடுக்க தேவன் கிருபை செய்வாராக.** *தேவனுக்கே மகிமை!*

**. . .சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்**

## ஈமெயில் மூலம் வந்த சாட்சி !

**சகோதரி வசந்தி சாமுவேல் :**

என் மூத்த சகோதரன் இருதய அறுவை சிகிச்சைக்காக மருத்துவனையில் சேர்க்கப்பட்டார். அவரின் இருயத்தில் ஏழு அடைப்புகள் இருந்தன. அவருக்கு ஐந்து மணிநேரம் சிகிச்சை நடைபெற்றது. கர்த்தருடைய கிருபையினால் கஷ்டமான சிகிச்சை எளிதான முடிந்தது. என் சகோதரன் குணமானால் TVGM–க்கு சாட்சி எழுதுவேன் என பொருத்தனையோடு ஜெபித்தேன். கர்த்தர் கொடுத்த சுகத்திற்காக ஸ்தோத்திரம்.

ஈமெயில் மூலம் ஜெபவிண்ணப்பங்களை அனுப்ப விரும்புகிறவர்கள் எங்களது ஈமெயில் : **100village@tvgm.org** - க்கு அனுப்பி வையுங்கள். ஜெபிக்கிறோம். கர்த்தர் பதில் கொடுப்பார்.

## TVGM அறிமுகப்பணி அலுவலகம் மூலம் வந்த சாட்சிகள் !

**சகோதரி ஏஞ்சல் மகிழா**

நான் கர்ப்பமாயிருந்த சமயத்தில் பலவிதமான கஷ்டங்கள் என்னை நெருக்கியது. அந்த சமயத்தில் பலர் பிரசவம் எப்படியிருக்குமோ என பயமுறுத்தினார்கள். ஆனால் தேவன் எந்த குறையுமின்றி அழகான ஆண்குழந்தையை கொடுத்தார். அதுமட்டுமல்ல, என் குழந்தைக்கு காய்ச்சல் வந்தது. TVGM பத்திரிகையில் சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு குழந்தைக்கு சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை!

**சகோதரி பாமா , மார்த்தாண்டம்.**

எனது மகன் கவின் Hotel Management படிக்கும்போது அவனுடைய படிப்பிற்காகவும், வெற்றிக்காகவும், நல்ல ஒரு வேலை கிடைக்க வேண்டுமென்றும் TVGM பத்திரிகையில் சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு அவனுக்கு நல்ல வெற்றியை தந்ததோடு மட்டுமின்றி வெளிநாட்டில் ஒரு நல்ல வேலையையும் கொடுத்து ஆசீர்வதித்துள்ளார். தேவனுக்கே மகிமையுண்டாவதாக.

## TVGM அறிமுகப்பணி அலுவலக தேவை
## மாருதி ஆம்னி வேன் ( விலை ரூ. 3 லட்சம் )

நாகர்கோவில் அறிமுகப்பணி அலுவலக சகோதரிகளின் அலைச்சலையும், நேரத்தையும் மிச்சப்படுத்தி இன்னும் அதிகமான மக்களை சந்தித்து ஜெபித்து வர வசதியாக ஒரு ஆம்னி வேன் வாங்கி கொடுக்க வாஞ்சிக்கிறோம். இதற்காக ஜெபியுங்கள். தகுதியானவர்களிடம் அறிமுகம் செய்யுங்கள்.

P.T. கிறிஸ்டோபர். **TVGM** ஸ்தாபகர்

போன் : **0431 - 2607241** செல் : **94435 44628**

# கன்னியாகுமரி மாவட்ட
# TVGM அறிமுகப்பணி அலுவலகம்
# 2011 பிப்ரவரி மாத ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் பிப்ரவரி மாத ஊழியங்கள் ஆசீர்வாதமாக நிறைவேறின. **தேரூர்** கிராமத்தில் சுவிசேஷ ஊழியம் தொடர்ச்சியாக செய்ய கர்த்தர் திறந்த வாசலை தந்தார். பின்தொடர்பணிக்காக விலாசங்கள் கிடைத்தன.

**சகோ. சார்ன்ஸ்** அவர்களுடைய முயற்சியினால் **பேச்சிப்பாறை** சபையில் அறிமுகப்பணி புதிதாகச் செய்ய தேவன் கிருபை செய்தார். மேலும் புதிய அறிமுகப்பணிகளுக்காகவும், தரிசன முகாமுக்காகவும் ஒழுங்குகள் செய்ய கர்த்தர் கிருபை செய்தார். திறந்தவெளிக் கூட்டங்கள் மற்றும் வீட்டு ஜெபக்கூடுகைகளிலும் ஊழிய சகோதரிகளை கர்த்தர் தமது மகிமைக்காக எடுத்து பயன்படுத்தினார்.

தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

கிறிஸ்துவின் பணியில்,
**ஷோபனா இவான்சலின்.**

**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001 செல்: **98658 26424** போன் : **04652 - 277251**

**நாளுக்கு நாள் அவருடைய இரட்சிப்பைச் சுவிசேஷமாய் அறிவியுங்கள்.** சங்.96:2

## TVGM 100கிராம ஊழிய தரிசன முகாம்

**இடம் :** YMCA , விவேகானந்தபுரம் , கன்னியாகுமரி மாவட்டம்.
**நாள் : 2011** ஏப்ரல் **14** வியாழக்கிழமை
**நேரம் :** காலை 9 மணி முதல் மதியம் 2 மணி முடிய

**தரிசனசெய்தி**

**சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், C.E.O**

**சகோ. P.T. கிறிஸ்டோபர், ஸ்தாபகர்**

100–கிராம ஊழியர்கள் மற்றும் முழுநேர ஊழியர்கள் சாட்சிகள் இடம் பெறும்.

**யாவரும் கலந்து கொண்டு தேவஆசீர்வாதம் பெற்று செல்ல அன்புடன் அழைக்கிறோம்.**

**தொடர்பு முகவரி :** TVGM ஒருங்கிணைப்பாளர்
நாகர்கோவில்.
போன் : **04652 - 277251** செல்: **98658 26424**

**அனுமதி இலவசம் ! மதிய உணவு வழங்கப்படும்.**

**Form IV** Statement about ownership and other particulars about newspaper

**"HUNDRED VILLAGE MINISTRY"** to be published in the first issue of every year after last day of February.

**1. Place of Publication :** Somarasampettai

**2. Periodicity of its Publication :** Monthly

**3. Printer's Name :** Mr. Stephen Christopher **Nationality** : Indian
**Address** : T.V.G.M Publication Printers, C/o T.V.G.M. Publication Trust, 4/274, Hundred Village, Somarasampettai, Trichy - 620 102.

**4. Publisher's Name :** Mr. Stephen Christopher **Nationality** : Indian
**Address** : T.V.G.M. Publication Trust, 4/274, Hundred Village, Somarasampettai, Trichy - 620 102.

**5. Editor's Name :** Mr. Stephen Christopher **Nationality** : Indian
**Address** : T.V.G.M. Publication Trust, 4/274, Hundred Village, Somarasampettai, Trichy - 620 102.

**6. Names and addresses of individuals :** No T.V.G.M. Publication Trust

I, Stephen Christopher hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Sd

**Date: 13.03.2011** **Signature of Publisher**

## முழுநேர ஊழியர் குடும்பம் தேவை!

**"இயேசுவே வழி"** ஊழியத்தின் மூலம் காங்கேயம் / ஈரோடு மத்தியிலுள்ள **வானவராயன் நல்லூர்** கிராமத்தில் ஊழியம் செய்து, கட்டப்பட்டுள்ள ஆலயத்தில் ஞாயிறு ஆராதனை நடத்தவும் தரிசனம் பெற்ற ஒரு ஊழியர் குடும்பம் தேவை. ஜெபியுங்கள்.

( தொடர்பு :**பாஸ்டர் ராஜகுமார், பூதபாண்டி,** செல் : 94428 29823)

## TVGM குறுகிய கால சீஷத்துவ வேதாகம பயிற்சி

**2011** ஏப்ரல் 25 முதல் மே 31 முடிய, திருச்சி – சோமரசம்பேட்டையில் கடிதத் தொடர்பு ஊழியத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்ட புறமத நண்பர்கள் இருபாலருக்கும் வேதாகம வகுப்புகள் நடத்தப்படும்.

தங்குமிடம், உணவு, படிப்பு இலவசம். ஒழுங்கும் கிரமுமாக வேதபாடம் கற்றவர்களுக்கு 2011 மே 31 ம் தேதி சான்றிதழ் வழங்கப்படும்.

**விண்ணப்பப்படிவம் பெற ரூ 10 மட்டும் TVGM தலைமை அலுவலகத்திற்கு ( உங்கள் முகவரியுடன்) அனுப்பி வையுங்கள்.**

உங்கள் சபை போதகரின் சிபாரிசு கடிதத்தையும், இணைத்து அனுப்புங்கள்.

**வயது, படிப்பு கவனிக்கப்படுவதில்லை.**

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக்.** 5:16

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள்:** 2011ல் '**இயேசுவுக்கு சாட்சிகள்**' என்ற தலைப்பில் T.V. நிகழ்ச்சிகள் வெளிவர ஜெபியுங்கள். 100–கிராம ஊழியர்கள், ஆதரவாளர்கள் மனந்திரும்பி, பாவமன்னிப்பு பெற்ற இரட்சிப்பின் சாட்சிகள் வெளிவர ஜெபியுங்கள்.

**செவ்வாய்:** 2011 அக்டோபர் 14, 15, 16 ஆகிய தேதிகளில் '**கலிலேயா முகாம்**' நடத்த தீர்மானித்து ஜெபித்து வருகிறோம். பொறுப்புடன் பிரயாசப்படுகிற திரு. ரத்தினம் ஆசிரியர் மற்றும் திரு. மனோகர் ஆசிரியர் அவர்களுக்கு தேவன் நல்ல சுகத்தையும், பெலத்தையும் கொடுக்கும்படி ஜெபியுங்கள்.

**புதன் :** 2011 ஏப்ரல் 14ம் தேதி கன்னியாகுமரி – **விவேகானந்த புரத்தில் ' 100–கிராம ஊழிய தரிசனமுகாம்'** நடைபெற உள்ளது. ஜெபியுங்கள். நாகர்கோவில் அறிமுகப் பணி அலுவலகத்தில் பணிபுரியும் சகோதரிகளுக்கு தேவன் நல்ல சுகத்தை கொடுக்க ஜெபியுங்கள்.

**வியாழன் :** TVGM Trust FCRA Order கிடைக்கவும், TASOL நிலங்களுக்கு பட்டா மற்றும் நிலத்திற்கு ரூ.1 லட்சம் கொடுக்கக்கூடிய 27 பங்காளர்கள் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

**வெள்ளி :** மாதந்தோறும் நடைபெறும் 100–கிராம ஊழியங்களுங்களுக்காக, ஊழியம் செய்ய வரும் தன்னார்வத் தொண்டர்களுக்கு தேவன் நல்ல சுகத்தையும், பாதுகாவலையும் தரும்படியாக ஜெபியுங்கள். மாதம் ஒருமுறை 100–கிராம ஊழியம் செய்ய தேவையான ரூ.50,000 சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

**சனி :** 2010 – 2011 ஆண்டுக்கான வரவு, செலவு கணக்குகள் யாவும் தணிக்கை செய்யப்பட ஜெபியுங்கள்.

TVGM ஆண்டுவிழா 2011 மே 6,7,8 ஆகிய தினங்களில் வைக்க தீர்மானித்திருக்கிறோம். ஜெபியுங்கள்.

**ஞாயிறு :** TVGM மூலம் ஆதாயம் செய்யப்பட்ட ஆத்துமாக்களுக்காக, ஜெபிக்கிற, கொடுக்கிற, உழைக்கிற யாவருக்காகவும், TVGM தலைமை அலுவலகம் மற்றும் கிளை அலுவலக ஊழியர்கள் மற்றும் சிறுவர் இல்லத்தை கவனித்து வருபவர்களுக்கு தேவன் விசேஷித்த ஞானத்தை கொடுக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

முழுஆண்டு தேர்வு எழுதிக் கொண்டிருக்கும் TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகள் யாவரும் வெற்றி பெற ஜெபியுங்கள்.

**TVGM தலைமை அலுவலக முகவரி**

**BRO.STEPHEN CHRISTOPHER**
**MANAGING TRUSTEE**
**TAMIL VILLAGE GOSPEL MISSION**
**1OO-VILLAGE,**
**Veeranginallur Road,**
**SOMARASAMPETTAI ( Hospital Stop)**
**TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.**
**STD Ph : 0- 431 - 2607241 Email : 100village@tvgm.org**


**கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு டிராப்ட் , செக், போஸ்டல் ஆர்டர், M.O அனுப்ப வேண்டிய முறை**

1.TAMIL VILLAGE GOSPEL MISSION (100- கிராம ஊழியம், ஜெபவீடு)
2. T.V.G.M. PUBLICATION ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)
3. TASOL ( நிலம் வாங்குவதற்கும் மற்றும் கல்வி நிதி )
4. T.V.G.M. SOCIAL SERVICE சிறுவர் இல்லம், ஏழை, எளியவர்கள் உதவி ( இதற்கு மட்டும் 80 G வரிவிலக்கு உண்டு )

குறிப்பு :Bank Account நம்பர் தேவைப்பட்டால் தயவுசெய்து உங்கள் நோக்கத்தை குறிப்பிட்டு எங்களுக்கு ஈமெயில் / தபால் எழுதவும்.

குறிப்பு :Bank To Bank அனுப்பும்போது உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண், காணிக்கை அனுப்புவதின் நோக்கம் யாவையும் TVGM தலைமை அலுவலக முகவரிக்கு தபால் அல்லது எங்கள் Email: 100village@tvgm.org மூலம் தெரியப்படுத்தி உதவுங்கள்.

**Website : www.tvgm.org**

தினசரி வாக்குத்தத்தம், மாதாந்திர வாக்குத்தத்த செய்தி
,**'100 கிராம ஊழியம்'** அனுபவ சாட்சிகள்,
TVGM Documentary, TVGM சிலுவைக்கொடி பாடல்கள்,
மற்றும் முக்கிய நிகழ்ச்சிகள் வெளியிடப்பட்டு வருகிறது.
**தவறாமல் பாருங்கள் ! ஜெபியுங்கள் !**


Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011

HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011

Posting Date 25th at H.P.O. Trichy.

# ஜெபக்கூடாரம் பிரதிஷ்டை விழா







திருச்சி மாவட்டம் – அம்பேத்கார் நகர் – **சோமரசம்பேட்டை**யில் கட்டியுள்ள ஜெபக்கூடாரத்தை **சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்** 03.02.2011 அன்று தேவனுடைய மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்தார்கள்.

**Thanks:** Dr. Swamy, Sis. Grace & family - U.K.

**To**

**Return Requested:** TVGM ,
100 - Village,
Somarasampettai, Trichy - 620 102. India.